**செ. கு. எண்**:428 **நாள்**:30.11.12

விழாவிற்கு தலைமையேற்றிருக்கும்
மேதகு ஆளுநர் அவர்களே,

தமிழகச் சட்டமன்றப் பேரவையில்
இந்நாள்
ஒரு பொன்னாள்.

வைர வரிகளாக
வரலாற்றில் இடம்பெறும் நன்னாள்.

தமிழகம் வளம்பெற
தமிழ் மக்கள் அனைவரின் வாழ்வும்
மேன்மையுற

தன்னலம் கருதாது
மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து,

அல்லும் பகலும் பாராமல்
அயராது நாளெல்லாம் உழைத்து,

இந்தியாவில்
தமிழகம் முன்னிலைபெற,

அகிலத்தில் உள்ளோர் அனைவரும்
வியக்கும் வகையில்
தினந்தோறும்
முன்னோடித் திட்டங்களை அறிவித்து,
செயல்படுத்தி,

எம் பூமியில் எளியோர் எவரும் இல்லை,
யாவரும் சமம் என்ற
நிலையை உருவாக்கி

சிறப்பாக
மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி செய்யும்
இந்த நல்ல வேளையில்
நடைபெறும்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
வைர விழாவிற்கு
மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
அழைப்பை ஏற்று
முக்கிய விருந்தினராக
வருகை தந்து
சிறப்புரை ஆற்றியுள்ள
மேதகு இந்திய குடியரசு தலைவர் அவர்களுக்கு
மாண்புமிகு அம்மா அவர்களின் சார்பிலும்
நம் அனைவரின் சார்பிலும்
நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.
விழாவிற்கு தலைமையேற்று
தலைமை உரையாற்றி அமர்ந்துள்ள
மேதகு ஆளுநர் அவர்களுக்கு
மாண்புமிகு அம்மா அவர்களின் சார்பாகவும்,
நம் அனைவரின் சார்பாகவும்
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் சீரோடும், சிறப்போடும்
ஆட்சி நடத்தி,
சட்டம் ஒழுங்கை காத்து,
தமிழக மக்கள் அனைவரின்
நம்பிக்கையைப்பெற்று
இந்திய மக்கள் அனைவரும்
எதிர்பார்த்து காத்திருக்கிற
நாளைய பாரதத்தின்
நம்பிக்கை நட்சத்திரமாய் விளங்கும்

வரலாற்றுப் பெட்டகம்
மாண்புமிகு தமிழக முதல்வர்
புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு
நன்றிகளை
மலர்ப்பாதங்களில்
காணிக்கையாக்குகின்றேன்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த
இந்த வரலாற்று நிகழ்ச்சியில்
எளிய தொண்டனாகிய
எனக்கு நன்றி தெரிவிக்கும்
வாய்ப்பைத் தந்தமைக்கு
புறநானூற்றின் வீரமாகவும்,
புதுமையின் விவேகமாகவும்,
ஒட்டுமொத்த தமிழர்களின் விடிவெள்ளியாகவும்,

2023 ஆம் ஆண்டில்
தமிழகம் முன்னேற்றத்தில், வளர்ச்சியில்
உலகத்தின் உச்சியை அடைய
நடவடிக்கைகள் எடுத்துவரும்
தரணி போற்றும்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
இதயதெய்வம்
புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு
எனது நன்றி மலர்களை
பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.
வாழ்த்துரை வழங்கிய

**மாண்புமிகு தலைமை நீதியரசர் அவர்கள்,**

வருகைபுரிந்து விழாவினை சிறப்பித்த
மாண்புமிகு புதுச்சேரி சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள்,

முதல் சட்டமன்றப் பேரவையின் மூத்த உறுப்பினர்கள் ஆகியோர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின்
வைர விழா நிகழ்ச்சிகள்
மிகச் சிறப்பாக,
அனைவரும் போற்றிடும் வகையில்
நடைபெற நல் ஆலோசனைகள் வழங்கிய
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும்,
நல் ஆலோசனைகளை சிரமேற்கொண்டு
செயலாற்றிய
மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்,
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்,
மற்றும்
விழாக்குழு உறுப்பினர்கள்
அனைவருக்கும்
என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு நீதியரசர்கள்,
பாராளுமன்ற உறுப்பினர்கள்,
சட்டமன்றக் கட்சி கட்சித் தலைவர்கள்,
சட்டமன்ற உறுப்பினர்கள்
சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோருக்கும்
நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைமைச் செயலாளர், அரசுச் செயலாளர்கள்
மற்றும் அலுவலர்கள்,

காவல் துறை அதிகாரிகள்
ஏனைய அரசு அலுவலர்கள்,
பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறை நண்பர்கள்,

ஆகியோருக்கும்
எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விழா சிறப்புற
அயராது உழைத்திட்ட
நம்முடைய சட்டமன்றப் பேரவைச் செயலாளர்
அவர்களுக்கு என்னுடைய
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலப்பெட்டகமாக திகழும்
விழா மலர் மிகச் சிறந்த முறையில் அமைய
அனைத்து ஏற்பாடுகளையும் செய்த
மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும்,
மலர்க்குழு உறுப்பினர்களுக்கும்
மற்றும்
நிருபர் பிரிவு அதிகாரிகளுக்கும், நிருபர்களுக்கும்,
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விழா சிறப்பாகவும்,
செம்மையாகவும் நடைபெற
ஒத்துழைப்பை நல்கிய
அனைத்து நல்ல உள்ளங்களுக்கும்
நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவையின்
பவள விழா
செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலும்,
சுதந்திர இந்தியாவின்
பவள விழா
செங்கோட்டையிலும்,
மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையில்
நாளை நடைபெறும்
என்பது காலத்தின் கட்டாயம்.

விழா சிறப்புற நடைபெற
வருகை தந்து சிறப்பித்தவர்களுக்கும்,
உதவி செய்த அனைவருக்கும்
மீண்டும் எனது நன்றியைத்தெரிவித்து
உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி,

வணக்கம்.

* * * * *

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**